# கவிதை வானில் ஒரு வளர்பிறை.

......கவிதை நயம்......

★

கனக. செந்திநாதன்
(கரவைக்கவி கந்தப்பனார்.)

★

வரதர் வெளியீடு

**திரு. கனக. செந்திநாதன் அவர்கள்**

எழுதிய பிற நூல்கள்:

விரைவில் வெளிவருவன:

1. ஈழத்துப் பேனா மன்னர்கள்.
   (ஈழத்துச் சிறந்த நாற்பது எழுத்தாளர் களைப்பற்றிய அறிமுகம்)

2. ஒரு பிடிசோறு
   (சிறுகதைத் தொகுதி)

3. விதியின் கை
   (நாவல்)

4. வெறும் பானை
   (நாவல்)

5. மன்னிப்பு
   (நாடகம்)

6. கவிதை நயம்
   (நவாலியூர் சோமசுந்தரப் புலவரது கவிதைகள்)

# கவிதை வானில் ஒரு வளர்பிறை.

இலங்கை வானொலி நிலையத்தாரால்
தங்கப்பதக்கப் பரிசு வழங்கப்பட்ட
அல்வாயூர் கவிஞர்

**மு. செல்லையா அவர்களுக்கு**

(தலைமை ஆசிரியர், ஸ்ரீ லங்கா வித்யாசாலை, அல்வாய்)

யாழ்ப்பாணத் தமிழ் எழுத்தாளர் சங்கம், வரவேற்பும் வாழ்த்தும் அளித்த (20-9-58) பாரதி தினத்தன்று அவரது கவிதைகளின் நயங்களை வியந்து, குரும்பசிட்டி **திரு. கனக செந்திநாதன்** (கரவைக்கவி கந்தப்பனார்), அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு

ஐப்பசி 1958 | விலை சதம் 25.

பதிப்பாளர்:

**வரதர் வெளியீடு**

226, காங்கேசன் துறை, யாழ்ப்பாணம்.

# கவிதை வானில்
# ஒரு வளர்பிறை

முகவுரை.

அவைத்தலைவர் அவர்களே! எழுத்தாள நண்பர்களே! இவ் விழாவுக்குச் சமுகமளித்திருக்கும் பெருமக்களே! அன்பு கலந்த வணக்கம். தமிழுக்குப் புதுவாழ்வளித்த தருக்குடன் அதைத் தரணி மிசை என்றும் இளமை குன்றாது அழகுடன் இலங்கவைத்த சுப்பிரமணிய பாரதியாரின் நினைவு நாளை யாழ்ப்பாணத்தமிழ் எழுத்தாளர் சங்கம் கொண்டாடும் இந்நேரத்தில், இந்நாட்டில் பிறந்து தமிழே மூச்சாக, சமயமே நோக்கமாக, சமூக வளர்ச்சியே கருத்தாகக் கொண்டு உழைத்த, பாடிய, கவிகள் சமைத்த கவிஞர் செல்லையா அவர்களை வாழ்த்துவதும் போற்றுவதும் தகும் என்பதே என் எண்ணம்.

கவிஞர் செல்லையா அவர்கள் இருபத்தைந்து வருடங்களாகவே கவிதைகள் பாடி வருபவர் திரு. வி. க. அவர்களாலும், நாமக்கல் கவிஞராலும், தமிழறிஞர் சு. நடேசபிள்ளையவர்களாலும் திறமைமிகு கவிஞர் எனப் போற்றப்பட்டவர். (24–9–52) 1952–ம் ஆண்டிலேயே 'உலகியல் விளக்கம்' தந்த பெரும் புலவர் நவநீத கிருஷ்ண பாரதியாரால் புலவர்ப் பட்டம் அளிக்கப் பெற்றவர். 'ஈழகேசரியின் இருகண்களில் ஒன்று' எனத் தமிழ்த் தொண்டர் ஈழகேசரி பொன்னையா அவர்களால் 1935-ம் ஆண்டளவிலே புகழப்பட்டவர். எனவே அவருக்குப் புதுப் புகழை, இந்தக் கொண்டாட்டத்தின் மூலம் நாம் அளித்து விடப் போவதில்லை. எனினும் பல காலத்திற்குப்பிறகு இலங்கை வானொலி அவருக்குக் கவிஞர்ப் பட்டமும் தங்கப் பதக்கமும் அளித்துக் கௌரவித்தது. உடனே எழுத்தாளர்களாகிய நாமும் தூங்கிய கண்களை விழித்து அவர்பால் செலுத்துகின்றோம், அவ்வளவுதான்.

**கவிதை:**

**"ஓலை தேடி எழுத்தாணி தேடி ஆள் ஒய்ந்திருக்கும் இடம் [தேடியே ஒரு
மூலை தேடி தனது மூக்குக்கண் ணுடிதேடி முகத்திற் [பொருத்தியே
மாலை தேடி வருமட்டும் ஓர் கவி வந்ததென்று வரைந்து [வழுத்தும்'**

கவிராயர் களை நாம் கண்டிருக்கிறோம்,

**"கந்தரத்தர் அந்தரத்தர் கந்தரத்தர் அந்தரத்தர்
கந்தரத்தர் அந்தரந்தர் காப்பு"**

என மடக்கும் யமகமும் பாடும்-பல்லுடைபடும் பாக் களைப்பாடும்-அகராதிப் புலவர்களையும் பார்த்திருக்கிறோம்.

**"பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிடனாக உணர்வினின்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்"**

என்ற நன்னூற் சூத்திரத்தைச் சட்டமாக வைத்துக் கொண்டு மாரடிக்கும் இலக்கணப் பண்டிதர்களையும் நாம் சந்தித்திருக்கிறோம்.

"சொல்லு சொல் லென்று நாவில் இடிக்குது குறளியம்மே- இனிக்குறி சொல்லக் கேளே!" என்று குறி காரி கூறியதுபோல, ஏதோ ஒன்று இடிக்க "கொட்டாவி விட்டதெல்லாம் கூறுதமிழ்ப் பாட்டாக" எழுதும் நவ யுகக் கவிகளையும், அவர்தம் பாடல்களையும் நாம்கேட்டிருக் கிறோம். புதுமையைச் செய்பவர் யார்? என்ற வரன் முறை யின்றி-பழமையைப் பற்றிச் சிறிதும் சிந்தியாது-காகிதப் பூவை மணக்கின்ற கலைஞர்களையும் நாம் காணத்தவறவில்லை. இலக் கணம், தமிழ்க்கவிதை பாயும் வாய்க்காலுக்கு ஒருவரம்பு என்பதை உணராமல், அதை ஏதோ பேயோ பூதமோ போலப் பயப்படுத்தும் ஒரு பண்டம் எனப்பயந்து படிக் காமலே உடைக்கும் வாலிபர்கூட்டமும் பல்கிப் பெருகி, 'கவி தையா? வேண்டாமப்பா' என்ற நிலையும் வந்துகொண்டுதா னிருக்கிறது

**கவிஞர் பாடல் (மொத்தமாக)**

இத்தப் பல நிலைகளில் கவிஞர் செல்லையா பழைமையைப்

போற்றிப் புதுமையை வரவேற்ற கட்சியில் காட்சிதருகிருர். அதில் எனக்கு ஒரு திருப்தி. ஈழத்தின் பாதை-முக்கியமாக யாழ்ப்பாணத்தின் பாதை-அதுதான். அவருடைய கவிதைத் தொகுதியாகிய வளர்பிறையில் இந்தக்காட்சியை நாம் காண்கின்றேம்.

முத்துக்குமார கவிராஜ மேகம் பொழிந்த பாடலைப் போன்ற ஊர்ப்பெயரடங்கிய பாடல்களும், காளமேகப்புலவர் பாடிய சிலேடை, நிந்தாஸ்துதி போன்ற 'மூளை வேலை'ப் பாடல்களும் அவர் பாடியிருக்கிருர். உண்மை.

பாரதியார் பாடிய பாப்பாப் பாட்டு போன்ற பாடல்களும் அவர் பாடியிருக்கிருர் அதுவும் உண்மை. ஆனல் எந்தப் பாட்டைத் தொட்டாலும் யாப்பமைதி குன்ருமல் ஓசைநயம் கெடாமல் இருப்பதுதான் அவர்பாடலின் சிறப்பு.

**'சவியுறத் தெளிந்து தண்ணென் ருெழுக்கமும் தழுவிச் [சான்ருேர்**
**கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்''**

எனக் கம்பன் கோதாவரியினை வர்ணிக்கின்ருன். கவிக்கு அவன் கூறிய இலக்கணமே போதும், அதை வைத்துக் கொண்டு கவிஞரின் சிலபாடல்களைப்பார்ப்போம்,

**சரஸ்வதிதுதி:**

எதனைச் செய்யத் தொடங்கினும் கடவுளை வணங்கிச் செய்ய வேண்டும் என்னும் மரபு பற்றி கலைவாணி துதியோடு ஆசிரியர் தொடங்குகின்ருர். கம்பர், குமரகுருபரர் பாடிய கலைமகள் துதிகள் நாம் ஏற்கெனவே அறிந்தவை "நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும் பாடும் பணிக்குப் பணித்தருள்" எனக் கேட்கிருர் குமரகுருபரர். அவரது கேள்வியில் எஜமானை அடிமை கேட்கின்ற தொனி இருக்கிறது பாரதியாரின் கலைவாணி ஆவணித் திருநா ளொன்றில் காதல்செய்ய வந்த நங்கையாகக் காட்சி தருகிருள். "என்னுேடிணங்கி மணம் புரிவாய் என்று போற்றியபோ தினிலே இளம் புன்னகை பூத்து" மறைந்து விட்டாளாம் அவள். அதுவே அவருக்குப் போதியதாய் இருந்தது. தேசிக விநாயகம்பிள்ளை, நடமாடிக்களிக்கும் மயிலை அடைக்கலமா கச் சென்றடைகிருர் பூரணபக்தனைப்போல. நவாலியூர்ப்

புலவர்-நம் சோமசுந்தரனார் "நாமகள் புகழ்மாலை" என ஒரு பெரிய கவிதா சமுத்திரத்திலே மூழ்கவைத்திருக்கிறார். அதில் "மாவாழ் பொதிய மலையிற்பிறந்து" என்ற அருமையான பாட்டிலே "பாவை எந்தன் நாவாழ் வுகந்தமை நான் முன்பு செய்திட்ட நற்றவமே" எனப் பெருமிதங் கொள்கிறார் கம்பர், குமரகுருபரர், பரதியார், தே. வி, சோம சுந்தரனார் ஆகியவர்களின்பாடல்களோடு கவிஞர் செல்லையா வின் பாடலையும் பார்த்தால் கவி அவ்வளவு சோர்ந்துவிட வில்லை என்பது புலனாகும்.

**"அள்ளிடு கிணற்றில் பெய்தே அழுக்கினும் மாரி பெய்யும்
தெள்ளிய நிலவு தீயோர் சிறுமனைக் கண்ணும் சேரும்
வள்ளுவன் முதலோர் வாயில் வாழ்கலை வாணி அன்னே
எள்ளிய புன்மையேன் நா இருந்தருள் இறைஞ்சினேனே.**

"வானின்றிழியும் மழை கிணற்றிலும் பெய்கிறது; அழுக்கிலும் பெய்கிறது வான் நின்று ஒளிரும் நிலா, நல்லோர் பெருமனைகளிலும் தீயோர் சிறுமனைகளிலும் பொழிந்து கொண்டிருக்கிறது அவைபோல கலைவாணியாகிய நீயும் நல்லோரிடத்தும் தீயோரிடத்திலும் சமமாகக்கருணை வைப்பது முறையல்லவா? வள்ளுவன் முதலிய அருந்தமிழ்ப் புலவோர் வாயில் வாழ்ந்தாயே, எள்ளிய புன்மையேன் நாவும் இருக்கத்தான் இருக்கிறது நீ வந்து என்நாவிலும் இருந்தருள, நான் இறைஞ்சுகிறேன்' எனக்கவிஞர் அடக்கமும் பணிவும் தோன்ற அருமையான பொருளோடு ஓசைநயம் பொலியப் பாடியிருக்கிறார். ஆசிரியரது பாடல்களுக்குள்ளே உள்ள நல்லபாடல்களில் இது ஒன்று. இப்பாடல் பாடசாலை மாணவர்களது கவிதா இதயத்தை வளர்க்க உதவும் என எண்ணுகிறேன்.

## தமிழ்த்தாய் வாழ்த்து.

அடுத்துத் தமிழ்த்தாய் வாழ்த்து வருகிறது. ஆதிசிவன் பெற்ற தமிழ்க்குழந்தைக்கு ஆரியமைந்தன் அகத்தியன் இலக்கணம் கற்றுக் கொடுத்தான் என்று பெருமிதம் படப் பாரதி கூறுகிறான். ஆனால், வடக்கேயிருந்துவந்த ஆரிய அகத்தியன் தமிழ்ப்பண்பால் தமிழனாகி-ஆசிரியனாகி-விட்டபின்பும் அவன் பெயரைக் கூட உச்சரிப்பது பாவம் என இக்கால நவீன விமர்சகர்கள் கருதுகிறார்கள். நமது கவிஞர் அவர்கள்

அவன் நாமத்தை உச்சரித்துக் கொண்டே பாடலைத் தொடங்கு கிறார். பழமையிற் கால்கொண்டவரல்லவா?

**அகத்தியன் தொல் காப்பியனை முன்னு ளீற்றாய்!**
**அருட்கீரன் கபிலன் சீர் ஔவை ஈன்றாய்!**
**மிகத் தெளிந்த வள்ளுவனை உலகுக்கீந்தாய்!**
**மேவு கம்பன் இளங்கோவை விதந்து பெற்றாய்!**

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவன் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை. உண்மை" என்று சத்தியஞ் செய்த பாரதி யின் அடியொற்றி வந்த கவிஞரை, தேவாரத் திருவமுதும் ஆழ்வார்களின் அருட்பாடலும் கைகாட்டி அழைக்கின்றன. ஈழத்தின் பழமை-யாழ்ப்பாணப் பரம்பரை—அவரை விட்டு விடாமல் ஆட்கொள்ளுகிறது அப்பால் அவர் சொல்வதைக் கேளுங்கள்:—

**சகத்தில் உயர் சம்பந்தர் முதலோர் ஆழ்வார்**
**சந்தான குரவர் சீர்த் தாயு மானார்**
**ப த் துணர்ந்த பாரதியைத் தந்த கன்னிப்**
**பழந்தமிழ்தாய் புதுமலர்தாள் பணிந்திட்டேனே.**

பழந்தமிழ்த்தாய் புதுமலர்தாள் பணியும் காட்சி, கவிஞ ரை ஒரு உயர்ந்த ஸ்தானத்தில் தூக்கி வைத்து விடுகிறது. அப்பால் நாவலர், தாமோதரனார், ஞானப்பிரகாசர், சாமிநா தையர், விபுலானந்தா, வேதாசலம் என்போருக்கு வணக்கம் செலுத்துகிறார் கவி. அகத்தியர் தொடக்கம், விபுலானந்தாவரை அவர்காட்டும் இந்தப்பாதை-படிமுறைவைப்பு-என் இதயத்தை ஈர்த்து நிற்கிறது என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

## காந்தி பாடல்.

காந்திமகானில் கவிஞர் கொண்ட பற்று தமிழ்ப்பற்றுக் குக் குறைந்ததல்ல. முன்னிரண்டு அடிகளிற் காந்தி மகா னின் வரலாற்றுக்குறிப்பும், பின்னிரண்டு அடிகளில் அதற் கேற்ற குறளும் அமைய அவர் பலபாடல்களைப் பாடியிருக் கிறார், சோமேசர்முதுமொழி வெண்பா, திருக்குறட்குமரேச வெண்பா என்பவற்றைப்போல. மகாத்மாகாந்தியையும், நேரு வையும் பற்றிய பல பாடல்கள் இக்கவிதைத் தொகுதியில்

இடம் பெற்று அவர்களின் அகத்தையும் புறத்தையும் நமக்கு நன்கு படம் பிடித்துக் காட்டுகின்றன.

**உடை சுருக்கி ஊன் சுருக்கி ஒவ்வாத தீய**
**நடை சுருக்கி நாவைச் சுருக்கி-படைசுருக்கிச்**
**சேவை பெருக்கித் தியாகம் பெருக்கி உயர்**
**தேவனென வாழ்ந்தார் சிறை**

என்ற பாடல், காந்திமகானின் வாழ்க்கையை சுருக்கமாகவும்-அதே நேரத்தில் ஆழ்ந்து யோசிக்கத் தூண்டும் பெருக்கமாகவும் காட்டுகிறது.

காந்தியை நினைத்த போது கவிஞருக்கு அடுத்துத் தோன்றியது அவரது நிர்மலமான குழந்தையுள்ளம்தான். எனவே கவிஞர் குழந்தைக் கவிஞர் ஆகிவிடுகிறார். ஆமாம் குழந்தைகளுக்காக அவர் எளிய, இனிய பாடல்களைப் புனைந்திருக்கிறார். வளர்பிறை என்று கவிதைத் தொகுதிக்கு இட்ட பெயரே ஒரு குழந்தைப்பாடல்தான். ஆனால்பெரியவர்கள் தங்கள் வீட்டுக்குழந்தைகளை ஒரு முறை மனதில் நினைவு படுத்திக் கொண்டு பாடிப் பார்த்தால் ஆசிரியர் இப்பாடலால் பெற்ற வெற்றி புலனாகும்.

## வளர்பிறை.

வானத்திலே பூரணசந்திரனை ஒரு தினங்கண்டு 'அம்புலி அம்புலி வா வா' வா என்று மகிழ்ந்த குழந்தை ஒன்று. சில தினங்களின் பின் பாதிச்சந்திரனையும் ஆயிரக்கணக்கான நக்ஷத்திரங்களையும் காண்கிறது. அக்குழந்தையின் மனதிலே பல சந்தேகங்கள். யாரிடம்கேட்பது? பெற்றுவளர்க்கும் அன்னை தான் இருக்கிறாளே; குழந்தை ஓடோடிச் சென்று தாயின் கையைப் பிடிக்கிறது. அப்பால்,

**'அம்மா, வெளியே வா அம்மா!**
**அழகாய் மேலே பாரம்மா!**
**சும்மா இருந்த சநதிரனைத்**
**துண்டாய் வெட்டின தாரம்மா?**

என்று கேட்கிறது. சும்மா இருந்த சந்திரன் என்றால் குழப்படி. ஒன்றும் செய்யாமல் இருந்த சந்திரன் என்பதுதான் குழந்தையின் கருத்து. குழப்படி ஒன்றும் செய்யாமல் இருந்த

அதை வெட்டலாமா? உடைக்கலாமா? என்ற எண்ணத்தின் மேல் எழுந்த கேள்வி இது. இந்தக் கேள்விக்கு அம்மாவால் என்ன கூறமுடியும்? குழந்தை ஏதோ தீர்மானத்துடன் மறு படியும் கேட்கிறது.

**"வட்டத்தோசை சுட்டது போல்**
**வானில் இருந்த சந்திரனைத்**
**துட்டச் சிறுவன் யாருடைத்தான்?**
**சொல்வாய் உண்மை தோன்றிடவே"**

குழந்தை தனக்குத் தெரிந்த ஒரு பொருளை-வட்டவடிவமான தோசையை—உவமானமாகக் கூறுகிறது சந்திரனுக்குத் தோசைதான் குழந்தையின் உவமானம். அருமையான உவமானத்தைக் கவிஞர் குழந்தை நிலையில் நின்று கண்டுபிடித்துப் போட்டிருக்கிறார், துட்டச் சிறுவனையும் அக்குழந்தை அறியும். அவன்தான் தன்வீட்டுக்குவந்து பொருட்களை உடைப்பவன். அப்படி யாரோ ஒருவன்தான் சந்திரனையும் உடைத்திருக்கவேண்டும். குழந்தையின் எண்ணம்இது இதன்பின்னும் எண்ணம் நீளுகிறது ...வினுக்கள் தொடர்கின்றன.

**"மட்டிப் பயலவன் வெட்டி விட்டு**
**மற்றப்பாதியை எங் கெறிந்தான்?**
**கிட்ட மினுங்குங் கட்டி யெலாம்**
**வெட்டிய மிச்சத் துண்டுகளோ?**

அருமையான வினுக்கள் இவை. தாய் என்ன கூறினளோ எமக்குத் தெரியாது, வளர்பிறை என்ற இந்த அருமையான கவிக்காக தமிழ் மக்கள் கவிஞர் செல்லையாவுக்கு என்ன செய்யப் போகிறீர்கள்? நிலா நிலா வா வா, அம்மா மெத்தப்பசிக்கிறது என்று பழைய புளித்துப் போன பாக்களிலேயே நெடு நாளாகச் சுழன்றுவருகிறோம். இப்படிப்பட்ட கவிதைகளைநாடு, நகரம், கிராமம் எங்கும் ஒலிக்கச்செய்வதுதான் நாம் அவருக்குச் செய்யும் வாழ்த்தாகும்.

## தாயின் மகிழ்ச்சி

சந்திரனைப் பற்றிக் கேள்விகேட்ட குழந்தையைத்தாய் அணைத்தாள்; உச்சிமோந்தாள். கூட்டிச் சென்று பாலன்னம் கொடுத்தாள். மடிமீதிருத்தி சாப்பிடச் செய்தாள். தீற்றினுள்

குழந்தைக்கு வினவுக்கு விடை கிடையாத கோபம். முரண்டு பண்ணியது. அன்னம் எல்லாம் தேகம் முழுவதும் பட்டது; சிதறியது. அவளுக்கு அதனால் கோபம் உண்டாகவில்லை. மகிழ்ச்சி; மிக்க மகிழ்ச்சி.

**தீற்றும் உணவு வகை சிதறித் தன்**
**தேகம் படுகையிலே**
**ஏற்றுஞ் சிவன்முடியில்—பக்தரிடும்**
**இன் மலர் போல் இனிப்பாள்**

தாயின் மகிழ்ச்சிக்கு "சிவன் முடியில் பக்தரிடும் இன் மலரை" உவமானம் கூற ஒரு செல்லையாவால்தான் முடியும். ஈழநாட்டுக் கவிஞர்களால் தான் இது சாத்தியமாகும் என்றும் சொல்லலாம்.

குழந்தையின் கேள்விகளையும் தாயின் மகிழ்ச்சியையும் பார்த்துவிட்டு அப்பால் நோக்கினால் இன்னொரு தாய் நான் குழந்தை பெறாமல் மலடியாய் இருந்தால் நல்லாயிருக்கும் என்று வேண்டும் வேண்டுதல் கேட்கிறது. இது என்ன புதுமை! அப்படிக் கேட்பது ஒரு குருவித்தாய்.

**"மற்றொரு பிறவி உண்டேல் மலடியாய் வாழும் வண்ணம்**
**உற்றிடு வரத்தைப் பெற்றே உலகிடைப் பிறப்பேன்"**

என்று அது உறுதியாய்க் கூறுவதன் காரணமென்ன? கோயில் அமைத்துத் தெய்வம் கும்பிட்டு வாழ்ந்து கொண்டு வாயில்லாப் பிராணி கொல்லும் மனிதனின் அரக்கத்தனத்தைக் கண்டுதான்.

குருவித்தாய் மலடியாய்ப் பிறக்கவில்லையே என்று வருந்த, சங்கரப்பிள்ளை அண்ணர் ஈயாய்ப்பிறக்கவில்லையே என்று வருந்தும் காட்சியையும் கவிஞர் காட்டுகிறார். இது ஒரு அருமையான காட்சி. கவிஞர் செல்லையாவை ஆண்டாண்டாய் நாம் நினைவில் வைத்திருக்கப் போதுமானகாட்சி.

## குடிகாரன் கூற்று

சங்கரப்பிள்ளை என்றால் அவ்வூரில் பலபேரிருக்கிறார்கள்; குடிகாரச் சங்கரப்பிள்ளை அண்ணர் ஒரேஒருவர்தான். அவர் ஒருநாள் தான்வழக்கமாகக் குடிக்கும் காத்தான் வீட்டுக்குப் போய் கள் தரும்படி கேட்டார், கடனாக அந்தவரும்படியிலே

தன் வாழ்க்கைத்தேரை ஓட்டும் தொழிலாழி காத்தான், பழைய கடனையும், வறுமை நிலையையும் சொல்லி கள் தரமுடியாது என்று மறுத்து விட்டான். கெஞ்சிக் கெஞ்சிக்கேட்டார் சங்கரப்பிள்ளை. வாய்க்கவில்லை. கடைசியில் "காத்தான்! நீ கள்ளுத் தராவிட்டாலும் பரவாயில்லை. என்கண்ணால் பார்க்க ஒரு முறையாயினும் காட்டு" என்று மன்றாடினார். காத்தான் மனமிரங்கி கள்ளோடு கூடிய பாத்திரத்தைக் காட்டினான். அதில் ஆயிரக்கணக்கான ஈக்கள் (இலையான்கள்) விழுந்து குடித்து மூழ்கிக் கிடப்பதைக் கண்டார் சங்கரப்பிள்ளை. கவியாகமாறிவிட்டார். பாடுகிறார், துக்கம் தோய்ந்த குரலிலேதான்.

**"தாயார் இருந்தென்ன! மக்கள் மனைவியர் சார்ந்துமென்ன!**
**மாயா உயிர் பெறு மானிடவாழ்க்கையில் வாழ்ந்துமென்ன!**
**ஓயாது தாங்குடித் தேசுக வாழ்வுறும் உத்தம இவ்**
**வீபாப் பிறக்கிலனே கள்ளில் மூழ்கி இறப்பதற்கே.**

நகைச்சுவையும் உண்மை நிலையும் நிலைபெறக்கவிஞர் காட்டும் குடிகாரன் ஒரு அருமையான காட்சி என்பதை மீண்டும் கூறுகிறேன்.

கலைவாணியையும் தமிழ்த்தாயையும் வணங்கிய கவிஞர் பாடல்களைப் பார்த்தோம், காந்தி மகானைச்சந்தித்தோம் குழந்தையின் கேள்வியையும், தாயின் மகிழ்ச்சியையும், குருவியின் சோகத்தையும் இரசித்தோம். சங்கரப்பிள்ளையின் சோகப் புலம்பலைக் கேட்டோம்....இனி....

## பாரதி யார்?

நவயுகக் கவிஞன் பாரதியின் விழாவாகிய இந்த நன்னாளிலே பாரதி பற்றிய கவிஞரின் பாடலையும் நாம் பார்க்கத்தான் வேண்டும். 'பாட்டுக்கொரு புலவன்' என்ற தேவியின் பாடல் பிரசித்தமானது. 'படித்தறியா மிக ஏழைக்கிழவனேனும்' என்ற நாமக்கல் கவிஞரின் பாட்டு உணர்ச்சி மயமானது. பாரதிதாசன் காட்டும் பாரதியை எழுத்தாளர்களாகிய நீங்கள் படித்து உணர்ந்திருப்பீர்கள். தமிழ்நாட்டுக்கவிஞர்களுக்குள்ளே பாரதிக்கு அஞ்சலி செய்யாதோர் மிகமிகச் சொற்பமே. எனினும் நமது கவிஞர். பாதியார் என்பதை பாரதி—யார்? என்ற வினவாகக் கேட்டு நம்மைத் திகைக்க

வைத்துவிட்டு அவரை, பொற்கொல்லன், வண்ணான், செக்கான், சாம்பான், தச்சன், வேடன் என்றெல்லாம் சொல்கிருர். பொய்ம்மைச் ஜாதிகளை எல்லாம் போட்டுடைத்த பாரதியை இப்படியெல்லாம் செல்லலாமா? ஆம் என்கிருர் கவிஞர்.

(தமிழ்த்) தாய்க்குப் புதுநகை செய்தணிவித்த
பொற்கொல்லன் என்று புகல்வோம்—சாதிப்
புன்மை அழுக்கினைப் போக்கிய வண்ணான்

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

மோக மரத்தினைச் சீவி—சுதந்திர
தாக மெனும் வண்டி செய்திடும் தச்சன்
ஓம் சக்தி ஓம் சக்தி என்றே—வலி
ஊட்டும் குழல் இசைத்தே தமிழ் மக்கட்
பாம்பினை ஆட்டிய வேடன்''

என்றெல்லாம் அவர் காரணங் காட்டும்போது நாமும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். பாரதியாரைப் பற்றிய பாடல்களுக்குள்ளே சிறந்த கவிதைகளுள் இதுவுமொன்று என்பது என் எண்ணம்.

## ஆறுமுக நாவலர்.

யாழ்ப்பாணத்து நல்லூரின் கண்ணே, கவிஞர் செல்லையாவுக்கு இவ்விழா நடப்பது மிகமிகப் பொருத்தமானது. தங்கப்பதக்கம் பெற்ற, புதிய வண்டு விடு தூதிலே ஆகாயவிமானத்தில் பலாலிக்கு வந்து சேர்ந்த வண்டைப் பார்த்துத் தூது போக்கிய காதலன், ''நாவலர் பிறந்த நாடல்லவா யாழ்ப்பாணம்; இனியும் விமானத்தில் பறக்கக்கூடாது. நீயாகவே பறந்து செல். நல்லூர்க்கந்தனையும் போய்வணங்கு'' என்று கூறுகிருன் நாவலரிடத்தும், நல்லூர்க் கந்தனிடத்தும் கவிஞருக்குள்ளபற்று அலாதியானது. நாவலருக்கு அஞ்சலி செய்த புலவர் பெருமக்கள் எண்ணிறந்தோர். 'ஆருரனில்லை புகலியர் கோனில்லை' என்று சிவசம்புப் புலவர் சைவநாவலரை நமக்குக் காட்டுகிருர். 'வேதம் வலிகுன்றியது' என்ற தாமோதரனர் பாடலில் சைவநாவலரையும் தமிழ் நாவலரையும் நாம் சந்திக்கிறோம். 'அருந்தமிழ்க் கலைமகள் கை யாழ் எ னு ம் யாழ்ப்பாணத்தின் பெருந்தவப்பயனாக' சுத்தானந்தருக்கு நாவலர் காட்சி தருகிருர்.

'சொல்லென்ற மலரிலேபொருளென்ற புதுமதுச் சொட்டிச் சுரக்க, ''பன்னு முதுபுலவரிடம் செய்யுள்நடை பயின்ற தமிழ்ப் பாவையாட்குவன்ன நடை வசனநடை வழங்கு நடை எனப் பயிற்றி வைத்தஆசான்'' என நவாலியூர்ப்புலவர் அஞ்சலி செய்கிறார். அருமையான பாடல்கள்தானிவை, நமது கவிஞர்செல்லையாவும்,

> **''பாட்டிற் கிடந்த தமிழன்னை யாண்டும் பரவுவகை**
> **தீட்டி வசனந் திகழ்நெறி காட்டிச் சிவநெறிகள்**
> **நாட்டிற் பரவ வழிஈட்டிச் சைவம் நனி விளங்க**
> **ஆட்டிய சூத்திர தாரி''**

என ஆறுமுக நாவலரைப் பரவுகிறார். 'பாட்டிற்கிடந்த தமிழன்னை,' பன்னுமுதுபுலவரிடம் சிக்கித் தன் பாட்டிற்கிடந்தவள்-செய்யுட்களுக்குள் அடக்கிக்கிடந்தவள்—என்றெல்லாம் விரியும். 'சூத்திரதாரி' அருமையானசொல். எவ்வளவோ அம் சங்களை அது அடங்கிநிற்கிறது. இந்தக் கவிதை கவிஞருக்கும் நன்கு பிடித்தமானது என்பதை. புதிய வண்டுவிடுதூதில் அவர் மீண்டும்அப்பாடலையே போட்டிருப்பதில் இருந்து புலனாகிறது.

## சுப்பிரமணிய சுவாமி துதி.

தொண்டமானாறு செல்வச் சன்னிதி கோவில் யாழ்ப் பாணக்குடாநாட்டில் பிரசித்தமானது ''கையில் வேலுடைய ஐயன், வினையுடையவே மிதிக்கும் காலுடைய கந்தனை'' சாதி பேதம் இன்றிச் சரணமடையும் பக்தர்கள் அங்கு ஏராளம். ''மத்தளம் வார்கொம்பு வார்குழல் கின்னரம் வாழ்த்தொலிப்ப' ஆடும் ஆட்டக் காவடியும் பாற்காவடியும் பார்க்கில் அங்கு தான் போகவேண்டும். தீராதநோய்களைத் தீர்க்கும் அவனிடம் கவிஞர் செல்லையாவும் ஒருமுறை பழிகிடந்தார்; தமக்கேற் பட்ட நோயைத்தீர்க்கத் தவங்கிடந்தார். அப்போது அவர் பாடிய பாடல்கள் நிந்தாஸ்துதியாக-வெளிவந்தன. ''அஞ்சுதலை நானுடையேன் ஆறுதலை நீயளித்தால்'' என்று ஓரிடத்தில் குறிப்பிடும்போது நக்கீரதேவர் அருளிய ''அஞ்சுமுகந் தோன்றில் ஆறுமுகந் தோன்றும்'' என்றபாடல் நம்கண்முன் வந்து நிற்கின்றது.

**நங்கையர்க்கு நான்கு விழி நாதனுக்கீ ராறுவிழி**
**தங்கு மயிற் காயிரங் கண் தானமைந்தும்-எங்குறைகள்**
**கண்டொழிக்க வன்மையிலாக் கந்தாநின் சன்னிதிசேர்**
**தொண்டருக்கு யாதோ சுகம்**

என்ற அவரது பாடலின் இனிமையைப் பாடிப்பாருங்கள். எளிமை இனிமை, ஆழம் என்ற கவிதையின் மூன்று அம்சங்களும் ஒருங்கே அமைந்திருப்பதை நீங்கள் உணர்வீர்கள்.

பாட்டாலே வையகம் பாலித்த பாரதியையும், வசனந் தீட்டி சைவம் விளங்க ஆட்டிய சூத்திரதாரியாகிய ஆறுமுக நாவலரையும், தொண்டமானுறு செல்வச் சன்னதியில் கவிஞரின் உருக்கமான பாடலையும் பார்த்தோம்........இனி....

## இரண்டு சிலைகள்

ஈழத் தமிழரின் இக்கால இடர்ப்பாட்டை அலட்சியம் செய்து மானையும், மயிலையும், குயிலையும் பற்றிப் பாடும் கவிஞர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் எந்த உலகத்தில் வாழும் கவிஞர்கள் என்று தம்மை நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்?

தமிழனின் இக்கால நிலையைக்கண்டு கண்ணீர் வடிக்காத தமிழன் இல்லை. தமிழ்த்தாயின் கண்ணீர்கண்டு ஏங்காத தலைவர் இல்லை. ஆனால் தமிழன் நிலை இப்படியாகும் என்று கனவிலும் கருதாது 'ஈழம் எங்கள் நாடு; சுதந்திரம் எமது பிறப்புரிமை' என்று பாடுபட்ட நம் மாபெருந்தலைவர்கள்-தமிழர்களின் இரண்டுகண்கள் -இராமலட்சுமணர்களைப்போன்ற சேர் பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம் என்போர் இன்று இருந்தால்? .. இருக்கத்தான் செய்கிறார்கள் சிலையாக, பாராளுமன்றக்கட்டிடத்தினுள்ளே. அச்சிலைகளாக நின்ற இந்த நிலையைக்கண்டு .. கவிஞர் பாடுகிறார்.

**திருவளரும் ஈழத்தாய் தளையின் நீங்கச்**
**செம்மை மிகு பணி செய்து சுதந்திரத்தின்**
**வருகைக்கு வித்திட்ட வண்மையாளர்**
**மரு விலங்கை மக்களுக்கு மத்தியானோர்**
**கருமநெறி வழுவாஇத் தொண்டர் இந்நாள்**
**கலங்குகின்ற தமிழ்த்தாயின் கண்ணீர் கண்டே**

**இருசிலையின் வடிவத்திற் கொழும்பில் நின்றே**
**ஏங்கினரா! சிரித்தனரா! இயம்பொணுதே**

அருமையான கருத்தும், உருக்கமும், தத்ரூபமான படப் பிடிப்பும் உள்ள இப்பாடல் கவிஞரின் ஏற்றத்துக்கு ஒரு உதாரணமாகும்.

## வண்டு விடு தூது.

வண்டைத் தூதாக விடும் சங்கதி பழையகதைதான். அதைப் புதுமையாகக் கையாண்டு கவிஞர் பதக்கமும் பரிசிலும் பெற்றுவிட்டார். சென்னை நகரிலிருக்கும் காதலன் ஈழத்தில்—வெள்ளவத்தையில் இருக்கும் காதலியாளுக்கு வண்டைத் தூதாக விடுகிருன். தன்காதலியின் நிலையை விளக்குகிருன்,

**பஞ்சார்ந்த மெத்தையிற் பாலும் புளிக்கப் படுத்திருந்து**
**துஞ்சாத கண்ணினள் என்வர வெண்ணிச் சுவரில்தொங்கும்**
**எஞ்சாத் திகதிக் கடதாசி தம்மை இகழ்ந் திகழ்ந்து**
**'நஞ்சான நீவீர் தொலைவீர்' எனச்சினம் நண்ணுவளே''**

அவளின் உருவ அழகை வர்ணிக்கிருன் முக்கியமாகத் தலைக் கோலத்தைப்பற்றிச் சொல்கிருன். சகோதரிகள் கோபிக்கக்கூடாது என்னிடம்.

**சுளகை முறுக்கைச் சும்மாடு தன்னைத் துடைப்பமதைப்**
**பழகு மிடியப்பத் தட்டை நிகர்க்கப் பலவிதமாய்**
**அழகு பெறக் கொண்டைவைத்தே அவைதிற மல்லவென்று**
**குழகுறு கூத்தலைக் கத்தரித் தாள் தலைக் கோலமிதே.**

இப்படியான நகைச்சுவையும் நிதர்சனமும் உள்ள இருபத்தைந்து கவிதைகளைக் கொண்ட புதிய வண்டு விடுதூதை நீங்களே ஒருமுறை படித்துப் பாருங்கள்.

## நகைச்சுவைக் கட்டுரைகள்.

பாடல்கள் மாத்திரமல்ல இவர் எழுதிய நகைச்சுவைக் கட்டுரைகளும் மனதைவிட்டு அகலாதவையே. பூச்சிகளின் மகாநாடு, பகிரங்கப் பரீட்சை, சைவ கிறீஸ்த சமரச சங்கம், புளுகுப்போட்டி இல.!, ரூபாய்கள் மகாநாடு, எங்கள் வீடு வாடைக்கு விடப்பட்டிருக்கிறது, யாழ்ப்பாணத்துப் பிரபல அப்புக்காத்து, காணுமற்போனவை, காசைக்காணவில்லை, திரு

வள்ளுவருக்குத் தெரியாதவை என்பன அவற்றுட் சில. அச் கட்டுரைகளுள்,

"என்னுடைய வியாசக் கடதாசிகளுக்கு மார்க் போட்ட பழக்கத்தினாலே நமது உபாத்தியாயர் கரும்பலகையில் கொம் பாஸ் இல்லாமல் பரிபூரண வட்டம் கீறப்பழகிக் கொண்டார்"

"அப்போது மிஸ்டர் அனேபிலிஸ் நுளம்பு எழுந்து பிரம ஸ்ரீ அறக் கொட்டியான் அவர்களைத் தலைமை வகிக்கு மாறு மகாநாட்டுச் சார்பாக வேண்டிக்கொண்டது"

"இவருக்குப் பணத்திலும் பார்க்கப் பொருட்களைப் பீசா கக் கொடுத்தால் மிகவும் சந்தோஷம். வழக்கிற்கு ஏற்பட்டா லும் கோட்டிலே அவரைக் காணமுடியாது இவர் யார் தெரி யுமா? மகாஸ்ரீ. ஸ்ரீமான் முனீயப்பர் அப்புக்காத்து. இவர் யாழ்ப் பாணக் கோட்டைக்குக் கிழக்கே சமீபத்தில் ஒரு சிறு வீட் டில் இருக்கிறார்" என்று கிண்டல் செய்திருக்கிறார். இப்படி யெல்லாம் அக்கால வாசகர்களுக்கு நகைச்சுவையின் ஆரம்பப் படியைத் தொட்டுக்காட்டிய 'அநு சுயா' கவிஞர் செல்லையா தான். நம்பவில்லையா? அவரே ஒரு கட்டுரையில் கூறுகிறார். "பலவருடகாலமாகச் சொந்தப்பெயரையே வெளியிட்டும், அபூ தன், முருக வரோதயன், பத்திரிகைப் பித்தன் என்னும் புனை பெயர்களை வெளியிட்டும், பற்பல கட்டுரைகளும், பாடல்க ளும் பிரசுரித்திருக்கிறேன். இவற்றுட்சில நகைச்சுவையை விளைவிப்பனவாயமைந்தன. 'அநு-சுயா' என்ற பெயரில் சொந்த ஊரும் பேரும் ஒரு வாறு தொனிக்கின்றன."

## முடிவுரை.

அன்பர்களே, கவிஞர் மு. செல்லையா அவர்களது பாடல் களில் சரஸ்வதி துதி, தமிழ்த்தாய் வாழ்த்து, காந்திபாடல், வளர்பிறை, தாயின் மகிழ்ச்சி, குருவியின் வேண்டுகோள், குடிகாரன் பேச்சு, பாரதியைப் பற்றியபாட்டு, நாவலருக்கு வாழ்த்து, சுப்பிமரணியசுவாமி பாடல் தமிழரின் துயர், வண்டுவிடு தூது, என்ற பன்னிரண்டு பாடல்களை உங்களுக் குத் தொட்டுக் காட்டியிருக்கிறேன் எனக்கு இரசிப்பது தான் உங்களுக்கும் பிடிக்கவேண்டுமென்பதில்லை. இலக்கிய

கர்த்தாவுக்கும் இரசிகனுக்குமிடையே விமர்சகப் பூசாரி சிறிது நேரந்தான் உலாவமுடியும். முட்டுக்கட்டையாக நெடு நேரம் தாமதிக்க வேண்டியதில்லை. வளர் பிறை என்றகவி தைத் தொகுதியை நீங்களே படித்துப் பாருங்கள். அதுமாத் திரமல்ல. தேசீயகீதம் என்ற சிறுநூலும் அவரால் 1932 ல் வெளியிடப் பெற்றிருக்கிறது அதில் இலங்கையின் நிலைபற்றி அன்றே கவிஞர் சொல்லியது இப்போது நடந்துகொண்டி ருக்கிறது. வேவிலந்தை அம்மன்பதிகம். முள்ளியவளை முருகன் பதிகம், என்பனவும் உருக்கமாக அவர் பாடியவையே. அவற் றைப்பற்றி ஒன்றும் சொல்லாமலே அமைகின்றேன். முடி வாக தேசீய கீதத்தில் கவிஞர் கூறிய அவையடக்கம் எனக் கும் பொருந்தும். அது.

**குற்றம் புகல்வார் குறுமா முனிதானும்,**
**சொற்றநூற் கண்ணுமது சொல்லுவரால்–நற்றமிழீர்**
**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப் பொருள் காண்ப தறிவு**

வணக்கம்.